1972 ஆகஸ்ட் 18]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நிரந்தரமாக நிலங்களை அவர்களுக்கே சொந்தமாக்க வேண்டும் என்பது பல ஆண்டுகளாக உள்ள பிரச்னை. சொந்தமாக்கி விட்டால் அவர்கள் அந்த நிலங்களில் மல்பரி பயிர் செய்யாவிட்டால் என்ன நடவடிக்கை எடுப்பது என்ற கேள்விக்கு அவர்களால் பதில் சொல்ல முடிய வில்லை. இந்த சிக்கல் அங்கே தொடர்ந்து இருந்து வருகிறது.

Chalk Crayons Unit

* 167 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to open any Chalk Crayons Unit at Ramanathapuram district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, மாநிலத்தில் இதன் மூலப் பொருள்கள் எந்தெந்த இடங்களில் கிடைக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திருச்சி மாவட்டத்திலே அரியலூர் பகுதியிலே கிடைக்கின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் 3 தொழிற்சாலைகள் இருக்கின்றன. மற்ற மாவட்டங்களைப் பற்றி விவரம் இல்லை.

கங்கை-காவிரி இணைப்பு.

* 168. வினா—திரு. கே. ஏ. வகாப்:

திரு. என். கே. பழனிசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கங்கை, காவிரி நதிகளை இணைக்க, ஐ.நா. நிபுணர்கள் உதவியுடன் மத்திய அரசு சர்வே நடத்துவதாக தமிழ்நாடு அரசிற்குக் குறிப்புகள் ஏதேனும் அண்மையில் வந்துள்ளனவா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS